## விண்ணப்பதாரர்களுக்கான வழிகாட்டுதல் / வழிமுறைகள்

1. தமிழ்ப் பல்கலைக்கழக இணையதளத்தில் (https://www.tamiluniversity.ac.in) பதிவிறக்கம் செய்யப்பட்ட விண்ணப்பம் ஒரே தாளில் (இருபுறமும்) அச்சிடப்பட வேண்டும்.

2. விண்ணப்பம் முழுமையாக நிரப்பப்பட்டிருக்க வேண்டும். முழுமையற்ற விண்ணப்பம் பரிசீலிக்கப்படாது.

3. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பம் வந்துசேர வேண்டிய இறுதிநாள் 27.05.2022 (கையால் எழுதப்பட்ட அல்லது அச்சிடப்பட்ட), தேவையான இணைப்புகளுடன் விரைவு/ தூதஞ்சல்/பதிவு செய்யப்பட்ட அஞ்சல் மூலம் இயக்குநர், **புத்தாக்கப் பயிற்சி வகுப்பு, தமிழ்ப் பல்கலைக்கழகம், வாகை வளாகம், தஞ்சாவூர்- 613 010** என்ற முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும். **"புத்தாக்கப் பயிற்சிக்கான விண்ணப்பம்"** என மேலெழுதப்பட்ட ஒரு உறையில் கடைசி நாள் அல்லது அதற்கு முன்னதாக வந்தடைய வேண்டும்.

4. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பம், முதல்வர்/பதிவாளர் வழியாக பரிந்துரைக்கப்பெற்று முறையாக அனுப்பப் பெறவேண்டும்.

5. விண்ணப்பக் கட்டணம் ரூ. 500/- (ஐநூறு மட்டும்) மற்றும் பதிவுக்கட்டணம் ரூ.1000/- (ஆயிரம் மட்டும்) செலுத்த வேண்டிய வங்கிக்கணக்கு விவரம்: **தமிழ்ப் பல்கலைக்கழகம், கணக்கு எண்: 814510110001040, IFSC code: BKID0008145, தமிழ்ப் பல்கலைக்கழக கிளை, Bank of India.**

6. **கட்டணம் செலுத்தாமல் பணிந்தனுப்பப்படும் விண்ணப்பம் ஏற்கப்படாது.**

7. விண்ணப்பதாருக்குத் தமிழ்ப் பல்கலைக்கழகம் மூலம் விண்ணப்பம் பெறப்பட்டதற்கான ஏற்பு தேவைப்பட்டால், அவர் விண்ணப்பத்தை விரைவு/ பதிவு அஞ்சலில் ஒப்புகைச் சீட்டுடன் அனுப்ப வேண்டும். அஞ்சல் வழியாகவோ அல்லது தொலைபேசி வாயிலாகவோ விண்ணப்பம் பெறப்பட்டதை தமிழ்ப் பல்கலைக்கழகம் தெரிவிக்காது.

8. பொதுவாக, விண்ணப்பத்தின் முன்கூட்டிய நகல் ஏற்கப்படாது. அரிதான சூழலில் தேவையான இணைப்புகளுடன் பணிந்துனுப்பப்பட்டால் தற்காலிகப் பதிவுக்காக மட்டுமே முன்கூட்டிய நகல் ஏற்கப்படும்.

9. தேர்வுப் பட்டியல், கால அட்டவணையில் மாற்றங்கள் மற்றும் பிற அறிவிப்புகள் தமிழ்ப் பல்கலைக்கழகம் இணையதளதில் (https://www.tamiluniversity.ac.in) வெளியிடப்படும். எனவே, விண்ணப்பதாரர்கள் விண்ணப்பங்களை பணிந்தனுப்பிய பிறகு, தமிழ்ப் பல்கலைக்கழக இணையதளத்தை அவ்வப்போது பார்வையிட அறிவுறுத்தப்படுகிறார்கள்.

10. விண்ணப்பதாரர்கள் தேர்ந்தெடுக்கப்படாவிட்டலோ அல்லது புத்தாக்கப் பயிற்சி ரத்து செய்யப்பட்டலோ புத்தாக்கப் பயிற்சி வகுப்பிற்கு விண்ணப்பம் செய்தவர்களுடைய பதிவு கட்டணம் திருப்பித் தரப்படும்.

11. புத்தாக்கப் பயிற்சி வகுப்பிற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் பங்கேற்கத் தவறினால் பதிவு கட்டணம் திரும்பப் பெற இயலாது.

23-6-2022

முனைவர் பெ. இளையாப்பிள்ளை
இயக்குநர்

Scanned with CamScanner